[illegible]
V. 5 : No 8.
Aug 1932

உ
R673 [illegible]
1932.5.8.
18/166

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

8 AU

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௫ | ஆங்கீரச ஆண்டு ஆவணித் திங்கள்<br>1932 ௵ ஆகஸ்டீ | இதழ் ௮ |
|---|---|---|

உள்ளுறை

| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சிவஞான போத விளக்கம் ... ... | ௧௯௩ |
| சொற்பொழிவுக் குறிப்புகள் ... ... | ௧௯௯ |
| மறைஞான சம்பந்தர் ... ... ... | ௨௦௩ |
| திருவகுப்பு ... ... ... | ௨௧௨ |
| சைவரும் விக்கிரக ஆராதனையும் ... ... | ௨௧௩ |
| ஐய வினாக்களுக்கு விடை ... ... | ௨௧௬ |
| திருவாசகம் உரையுடன் ... ... | ௬௩-௮௦ |

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—திரு. வி. உலகநாத முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 2-0-0. 1932 வெளி நாட்டுக்கு ரூ. 2-8-0.

தனிப் பிரதி அணா 4.

# சிறியன இகழேல்*

அற்பமே நிறைவினை ஆக்கும், அந் நிறைவும்
அற்பமா காதெனச் சிற்பநூ லறிஞர்†
செப்பினர் ; அதனாற் சிறியன இகழேல்.
இப்புவி யாங்கினில் ஏற்றமும் திறனும்
நல்குமா வேடம் புல்குதல்1 விழையேல்.
செயுஞ்சிறு தொழிலே சீரிய தாமெனக்(கு)
உயும்வழி, அதுவலது ஒன்றிலை பிறிதெனும்
கருத்தோ டியற்றித் திருத்த முறுக.
எய்தும் தொழிற்கண் எய்திறன் அனைத்தையும்
பெய்திடு வோரே பெருமையிற் பிறங்குவர்.2
இட்டிகை3 அடுக்கியே எழுப்புவர் மாளிகை ;
தட்டுமேல் தட்டாய்ச் சமைப்பர் கோபுரம் ;
இறைஇறை4 செய்தே நிறைவுறும் பெருந் தொழில்.
ஐயெனச்5 சிகரம் அணைதல் ஒண்ணுமோ ?
பையப் பையப் படர்வழி ஏறத்
தாழாது உஞற்றித் தாள்6 வழுக்குற்று
வீழா வண்ணம் விழிப்போ டமர்ந்து
குறியது நோக்கும் நெறியின் நீங்கார்
உயர்நிலை யெய்துதற் குரியவர் ; ஏனையோர்
துயர்நிலை வெம்பவச் 7 சுழிவழிப் பட்டுச்
சாலவும் வருந்தி ஓலமிட் டலைவர்,
மாடம் உயர்தலில் வாஞ்சை உடையோர்
பாடும்8 மெலிவும்9 படுதலா னல்லது
விரகால்10 அடையார் ; சரதம்11 ஈதே.
பகுதியொவ் வொன்றையும் பாங்குற அமைத்தின்
தொகுதியும் அத்துணைத் துலக்கம்12 நண்ணிடும்.
படிமிசைப் பிறந்த பலரும் மாண்பின்13
முடிமிசை வயங்கும் மொய்ம்பினைப்14 பெற்றிலர்.
ஆயினும் நமக்கென வாய்த்த வேலையை
நாளும் சிறிது நலமிகச் செய்யின்
நீளும் நம் தகை,15 நிலைஉயர்ந் தெய்வம்,
ஒல்லுவ16 தாற்றின் வெல்லுவம் இறுதியில்.
வினையிற் சிறுமையும் மேன்மையும் தங்கா ;
நினையிற் செய்திறன் நீர்மையால் அமைவன.
மிகச்சிறி யனஎன் றிகத்தில் உளவோ ?
அணுவினும் புகுந்திறை17 ஆட்டுதல் மெய்யெனில்,
பணிவுடன் சிறுதொழில் பண்பட ஆற்றலும்
இறைவனை வழிபடு முறைமையின் பாற்படும்.
புகழ்தலும் இலரே புலவோர்18 பெரியன ;
இகழ்தல் சிறியன அதனினும் இலரே.
நம்செயல் அனைத்தின் நயம்தெரி காலை
எஞ்சா திவர்ந்திடும்19 மிகச்சிறு செயலும்,
பொற்பூண் போலப் பொறை20 மிகும் ; ஆதலின்
அற்பமென் றொன்றிலை அவனியிற் பொருளே.

---

* இது " Little Things " (சிறு காரியங்கள்) என்ற தலைப்புடன் " Justice " (ஜஸ்டிஸ்) பத்திரிகையில் 13-6-32 அன்று வெளிவந்த ஆங்கிலப் பாட்டைத் தழுவி எழுதப்பட்டது. திரு. C. S. சுவாமிநாத முதலியாரவர்கள் மனமுவந்து அனுப்ப,ஈண்டு மகிழ்ச்சியுடன் இது வெளியிடப்படுகிறது.

† மைக்கல் ஆஞ்சலோ.

1. தரித்தல். 2. உயர்வர், நிறைவர் ஒளிர்வர். 3. செங்கல். 4. அணு, கடமை. 5. விரைவுக்குறி. 6. முயற்சி (காலடியுமாம்.) 7. கொடிய பிறவி. 8. உழைப்பு. 9. இளைப்பு. 10. சூழ்ச்சி, ஆசை. 11. உண்மை. 12. விளக்கம். 13. புகழ். 14. திறமை. 15. தகுதி. 16. இயன்றது. 17. கடவுள். 18. ஞானிகள். 19. படரும், எறும். 20. சுமை, (பொன்னாற் செய்த ஆபரணங்கள் போல.)


சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு "

| மலர் ரு | ஆங்கீரச ஆண்டு ஆவணித் திங்கள் 1932 ௵ ஆகஸ்மீ | இதழ் அ |
|---|---|---|


## சிவஞான போத விளக்கம்


[கி. குப்புச்சாமி முதலியார்]


### பயனியல்

### பத்தாஞ் சூத்திரம்

அதாவது, மேல் ஏழாம் சூத்திரத்துள் சாதிக்கும் பொருளின் இயல்பும், எட்டாஞ் சூத்திரத்துள் சாதித்துப் பெறப்படும் பொருளின் இயல்பும், ஒன்பதாஞ் சூத்திரத்துள் சாதிக்கும் அவ்விதத்தையும் உணர்த்தியவர்,இனி, அச்சாதனத்தாலாகிய பயனின் தன்மையை வகுத்துக் கூறும்வண்ணம் எடுத்துக் கொண்டனர். அப்பயனுவது, பாச நீக்கமும், சிவப்பேறும் என இருவகைப்படும். அவ்விரண்டனுள், சுட்டுணர்விலாகிய ஏகதேச நோக்கத்தைத் திருவஞ்செழுத்தினது உச்சரிப்பினுல், பற்றறத் துடைத்த இடத்து, பெறக்கூடியதாகிய மேலைச் சூத்திரத்துள் எடுத்துக் கொண்ட ஆன்ம சுத்தியின் பயனாகிய பாச நீக்கத்தைச் செய்து கொள்ளும் விதம் மேல் சிந்தனை செய்த பொருளினைத் தெளிவுபட உணர்த்துதல், இப்பத்தாஞ் சூத்திரமாகும். அது வருமாறு:—

" அவனே தானே யாகிய அந்நெறி
ஏகனாகி யிறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே. "

(இ - ள்) அவனே தானேயாகிய அந்நெறி-ஞானக் கண்ணால் காணப்பட்ட அம்முதல்வன்தான் உடனாய் நின்று அறியவும் வேறு காணப்படு

மாறு இன்றி யானே அறிந்தேனென்னும்படி, உயிர் தானேயாகி ஒற்றுமைப்பட்டு உயிரின் வழி நின்ற அப்பெத்த நிலைபோல, ஏகனாகி யிறைபணி நிற்க - உயிர் அம்முதல்வனோடு உடனாய் நின்று அறியினும், தானென ஒரு பொருள் வேறு காணப்படுதல் இன்றி அம்முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு அவ்விறை பணியில் வழுவாது நின்றால், மலம் - மலமும், மாயை - மாயையும், தன்னொடு - ஆகிய இவற்றோடு, வல்வினை - வலிய கன்ம மலமும், இன்று - இல்லாதாகிவிடும். (எ - று.)

ஆயின் இவ்விடத்து ஒற்றுமைப்படுதல் என்பதாவது, குடமொன்று உடைந்த இடத்து, அக்குடத்து உள்ள ஆகாயமும், ஆகாயமும் போல ஒரு பொருளாகி ஒற்றுமைப்படுதலோ, அல்லது, குற்றியை மகனென்பது போல, திரிபுகாட்சியால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது, மண்ணே குடமென்பதுபோல, ஒன்று திரிந்து ஒன்றாகி ஒற்றுமைப்படுதலோ, அல்லது வெள்ளையும் தாமரையும் போல, குணகுணித் தன்மையால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது தீயும் இரும்பும் போல ஒன்றோடொன்று சேர்தலால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது பாலும் நீரும்போல பிரிக்கக்கூடாத சேர்க்கையால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது கருடனும் மாந்திரீகனும்போல பாவனை ஒன்றினாலேயே ஒற்றுமைப்படுதலோ, அல்லது காய்ந்த இரும்பின் நீர் போல ஒன்றோடொன்று லயமாகி ஒற்றுமைப்படுதலோ, அல்லது பேயும் பேய் பிடியுண்டவனும்போல ஆவேசத்தால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது விறகினிடத்தே தீயைப்போல விளங்காமையால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது சூரியன் ஒளியின் முன் விளக்கொளி சத்தி கெடுதலால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது தலைவனும் தலைவியும்போல இன்ப நுகர்ச்சியளவால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது நட்புக்கொண்டார் இருவர்போல, நட்பு மிகுதியால் ஒற்றுமைப்படுதலோ, அல்லது பசுவையும் காட்டுப் பசுவையும் போல ஒற்றுமை யளவில் மாத்திரம் ஒற்றுமைப்படுதலோ என்ற அந்தந்த சமயவாதிகள் மதங்களில் உண்டாகும் ஐயங்களையெல்லாம் நீக்கும் வண்ணம் 'அவனே தானேயாகிய அந்நெறி'யென்று உவமை யெடுத்துக்காட்டியோதினார்.

இவ்விதம் உவமை எடுத்துக்காட்டிக் கூறியவர் சிவசமவாத சைவர் முதலியோர், ஞானம் பிரகாசித்து, முதற்பொருளைக் கண்ட அளவேயே வீடு பேற்றிற்கு அமையும் என்று கூறுவாராதலால் அவரை மறுப்பார்போன்று, ஈண்டுப் பரமேசுரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையால் அவனிடத்து ஏகனாகி நிற்கஎன்றனர். ஏனெனின், அங்ஙனம் ஒற்றுமைப்பட்டுநின்றவழியே யான் என்றும், எனதென்றும் பகுத்து நிற்கும் மயக்க அறிவிற்கு ஏதுவாய மலம் நீங்கி அம்முதல்வனது திருவடியாகிய சிவானந்தத்தைப் பெறுமாதலான். இனி, அவ்வளவோடு நில்லாது அவ்விதம் பகுத்து நின்று உணரும் உணர்வை மயக்க உணர்வு என்பது எதற்கு? என்னும் வாதிகளைத் தெளிவித்தற்பொருட்டு,

"...னவ னென்றெண் ணினர்க்கு நாடுமுள முண்டாத
...னென வொன்றின்றியே தான தவாய்—நானெனவொன்

ஆவணக்காப்பக ... 187166



றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத்
தில்லென்று தானா மிறை''

என்று கூறினர். இதன் பொருளாவது, யானென்றும், அவனென்றும், காண்போனையும், காட்சிப் பொருளையும் பகுத்து உணர்ந்து நிற்பார்க்கும், யானே யென்று நிற்பார்க்குப்போல அவ்வாறு எண்ணுகின்ற உயிரினது உணர்வு முனைத்து தோன்றும். ஆதலால் அவ்விதம் தானென்று ஒருமுதல் காணப்படுமாறு இல்லாமல் தான் அவ்வுணர்வேயாகி, இனியானென்று ஒரு முதல் காணப்படுமாறு இல்லையென்று உணர்ந்து, முழுவதும்தானே எனக் காணும் தெளிவினையுடையவரைத் தன்னுடைய திருவடி வியாபகத்துள் அடங்கி நிற்கச்செய்து அவ்வாறேயாவன் முதல்வன் என்பதாம்.

இதுகேட்ட வாதியானவன், நாடும் உளம் உண்டாய இடத்து, தான் இல்லையாதலும், அவ்விதம் இல்லாத இடத்து, தான் இருத்தல் ஆதலும், எவ்விதம் அடைதல் கூடும் என்று கூறலும், அதைக் காட்டுவான் புகுவார், தூல ஒளியாகிய கண்ணொளியும், சூக்கும வொளியாகிய விளக்கொளியும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையினை உற்று நோக்க வல்லவர்களுக்குப் பிரித்து அறியக் கூடாமையின், கண்ணொளியாகக் காணுமிடத்து, காணுந் தன்மையே முனைத்துத் தோன்றுமாதலால், அவ்விடத்து விளக்கொளி யிருந்தும், இல்லாததாக உள்ளதன்றோ? அவ்வித மல்லாது விளக்கொளியாகக் காணுமிடத்து, காட்டுந்தன்மையே அதிகரித்துத் தோன்றுமாதலால், அவ்விடத்துக் கண்ணொளி யிருந்தும் இல்லையாகுமன்றோ? இனி, கண்ணொளி யென்றும், விளக்கொளி யென்றும் பிரித்துக் காணப்புகினும், காணுந் தன்மையே முற்பட்டுத் தோன்றுதலால், அவ்விடத்து விளக்கொளியானது திரிபுக் காட்சியாக ஆவதல்லது தெளிவுக் காட்சியாக ஆவதில்லை. அதுபோல, தூல அறிவாகிய உயிரும், சூக்கும அறிவாகிய சிவமும் இரண்டறக் கலந்து நிற்கும் நிலையினையும் பிரித்து அறிவதற்குக் கூடாமையின், மேல் கூறிய, 'நாடு முளம் உண்டாய விடத்து'த் தான் இல்லையாதலும், நாடு முளம் இல்லாத இடத்துத் தான் இருத்தலும் அறிதல் கூடும். இதனைக் ''கண்ணொளி விளக்கின் சோதி கலந்திடும் கருத்தொன் றன்றே'' எனவும், ''காண்பானும், காட்டுவதும், காண்பதுவும் நீத்து உண்மை - காண்பார்கள்; நன் முத்தி காணார்கள்; காண்பானுங் - காட்டுவதுங் காண்பதுவுந் தண்கடந்தைச் சம்பந்தன் - வாட்டு நெறி வாராதவர்'' எனவும் கூறியதால் உணர்க என்றனர்.

இனி, முதல் அதிகரணத்தில் மேற் சூத்திரத்துக்கூறிய அஞ்செழுத்தினை அவ்விதிப்படி உச்சரிக்கின்ற இடத்து, அதனிடத்தே விளங்கும் ஞாதுரு ஞான ஞேய பகுப்பு இல்லாது, உச்சரித்தாலல்லாமல், மலவாசனை நீங்காமையால், அது அறும் வண்ணம் முதல்வனிடத்து, ஏகனாகி நிற்றல் வேண்டும் என்று மலவாசனை யறுதற்கு உபாயங் கூறியவிடத்து, அவ்வாறு ஆன்மா ஏகனாகி நிற்கின்ற காலத்து, அதன் குணமாகிய அறிவு இச்சை செயல்கள் கெட்டு ஒழியுமோ? கெடாது நிற்குமோ? என்பார்க்குக் கெட்டு

ஒழியுமென்னின், குணகுணி கெட்டு வேற்றுமையின்மையால், குணங் கெடவே குணியுங் கெடும் எனப்பட்டு, முப்பொருளும் நித்தமென்னும் சித்தாந்தத்தோடு முரண்பட்டு அவசித்தாந்தமாகும். கெடாது நிற்குமாயின், ஏகனாயிருத்தல் செல்லாததாகும் என்னும் ஆசங்கையை நீக்கும் விதத்தால், மற்றைய இரண்டாகிய மாயை கன்மம் ஆகிய இரண்டானது, வாசனை நீங்குதற்கு உபாயங் கூறுதற்கு இரண்டா மதிகரணத்தைக் கூறுவார்,

" இனி, இறைபணி வழுவாது நிற்க" என்றனர். அதாவது, அவனருளாலல்லது, ஒன்றையுஞ் செய்யாதிருத்தல் என்னும் இறைபணியைச் சலியாது செய்க என்று கூறினர். ஏனெனின், அவனருளாலல்லது, ஒன்றையுஞ் செய்யாதிருப்பானையின் அஞ்ஞான கன்மம் பிரவேசியாது நிற்குமாதலால் என்க.

இவ்விதங் கூறுதலும், உடம்பொடு நிற்பார், நுகர்வதற்கு வேண்டப்படும் பிராரத்த வினையும், அதுபற்றி யேறும் ஆகாமியமும், எக்காலத்தும் இருப்பனவாதலால், இறைபணி நிற்றலாலேயே அவ்விரண்டும் வந்து அடையா என்று கூறலும், பொருத்தமுடையது அல்லை; என்று கூறுபவரை நோக்கிப் பதில் கூறுவார் போன்று,

" நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மானுடைமை—யாமென்னி
னெத்தறு வினின்று மிறைபணி யார்க்கில்லைவினை
முற்செய் வினையுந் தருவான் முன் "

என்று ஏதுவை வலியுறுத்திக் காட்டியதாயிற்று. அதாவது, வினைகளை அநுபவித்தற்கும், சேர்த்தற்கும் கருவியாகிய இந்திரியங்கள் மாயேயமாவன அல்லாமல், யாம் ஆவன அல்ல; அவை சேட்டித்தலும், முதல்வன் வயத்தாலல்லாமல், நம் வயத்தாலல்ல; அவைகளோடு பொருந்தியிருந்து, வினைகளைச் சேர்த்தற்கும், அனுபவித்தற்கும் வினை முதலாகிய நாம் ஞானச் செய்திகளை முதல்வன் விளக்கிய விடத்து விளங்கி, அல்லாத இடத்து, விளங்கும் விதமில்லாமையால், அம்முதல்வன் வசத்தாகுவோமேயல்லது, சுதந்திர ராகோம் என்று இவ்விதம் பசுபாசங்கள் ஆகிய இரண்டனது இயல்பையுள்ளவாறு உணர்ந்து செய்வனவெல்லாம் அவன் அருளின் வழி நின்று செய்யுஞ் செயலாகக்கண்டு இருப்பதானால், இவ்வடிமைத் திறமுடையார், எந்த உடம்பில் நின்று எந்த வினைகளைச் செய்தாலும், அவர்கட்கு, அப்பசுபாசங்கள் பந்தமாதலில்லை; அவ்வாகாமிய வினையை உடன்கொண்டு வருவதாகிய பிராரத்துவ வினையும், தன்னைக் கூட்டுவிக்கும் முதல்வன் சந்நிதியில் உடல் ஊழாய்க் கழியும் என்பதாம்.

இதுகேட்ட வாதிகள் அவனருளே முன்னின்று செய்கின்ற இறைபணியார்க்கு உள்ள முற்செய்வினை, ஏனையோர்க்குப் போலல்லாது தருவான் முன்னாய் ஒழியுமாயின், அவ்விதம் இரு வேறுவிதமாகச் செய்யும் முதல்வன் நடுவு நிலைமையில்லாது, கோணுதலாகிய வஞ்சகமுடையான்



போலும்? என்னலும், அவ்விதம் இறைவன் வழுவுடையனல்லை என்று கூறுவதற்காக,

" சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாச் செய்து பிறர்தங்கள்வினை தான்கொடுத்த
லாய்ந்தார்முன் செய்வினையு மாங்கு "

என்று அருளினர். இதன் பொருளாவது, தம்மிடத்து அடைக்கலமென்று சார்ந்தோரை அவர்க்கு வரும் குற்றத்தை நீக்கி ஆதரவாய் நின்று காப்பது தலைமைக் குணமுடையார்க்குக் கடமையாதலால், முதல்வன், அவ்விதம் அடைக்கலமென்று சாராதாரை யொழித்துத் தன்னைச் சார்ந்தாரைப் பாதுகாப்பானாகியும், அவ்விதம் பாதுகாத்தலால் நடுவு நிலைமை கோணாதவனாய்த் தன்னைச் சார்ந்து தன் அடித்தொழில் செய்வார் தன்போல், ஆகாமியவினைத் தொடக்கு இல்லாதவராகச்செய்து, ஏனையர்க்குவரும் ஆகாமிய வினையை அவர்க்குக் கொடுப்பானாதலால், அவ்விருதிறத்தவரிடத்தும் நுணுகிவந்து கூடுவதாகிய பிராரத்துவ வினையும், அவ்விதஞ் செய்கின்றவர் செய்திக்குத் தக்க பயனாய் இரு வேறுவகைபடச் செய்வர் என்பதாம்.

இவ்விதம் சார்ந்தாரைக்காத்தல் தலைவர் கடன் என்று பழமொழியெடுத்துக்காட்டி, இது ஏனைச் சமயத்தார்க்கும் ஒப்பமுடிந்தது என்று கூறுங்காலத்து, அதுகேட்ட வாதிகள், இறை பணியார்க்குப் பிராரத்துவ வினையானது செய்வார் செய்திப்பயனாய் ஒழியுமென்றது பொருந்தாதென்றும், பிராரத்துவவினை யுண்டாயவிடத்து, அதனால் உண்டாகும் ஆகாமியமும் பிறவிக்குவித்தாய் நிலைபெறுதல் உண்டாகுமென்றும் கூறுதலும், பிராரத்துவவினை தாக்குதற்கு ஏது கூறுவார்,

" இங்குளிவாங் குங்கலம்போல ஞானிபான்
முன்செய் வினைமாயை மூண்டிடினும் - பின்செய்வினை
மாயையுடனில் லாதுமற்றவன் றன்மெய்ப் பொருளே
யாயவதனை லுணரு மச்சு "

என்றனர். இதன் பொருளாவது, தன்னிடத்துவைத்து எடுக்கப்பட்ட பெருங்காயத்திலிருந்து அதனுடைய வாசனையை வாங்கிக் கொள்ளும் பாத்திரத்தினிடத்து, அவ்வாசனையானது, குறைந்து மெதுவாக வீசுவது போல், அவனருளே துணை கொண்டு நிற்கும் இறைபணியார்க்குப் பிறவிகள் தோறும் வந்த பழக்கத்தால், ஒவ்வொரு காலத்து, புலன்கள் வழியே செல்லுகின்ற மனமும் உண்டாகுமாதலால், அது காரணமாக, பிராரத்துவ வினையும், அதற்கு வழியாகிய உடம்பு முதலிய மாயேயமும், மங்கிப்போய் வாசனை யளவாய் மெலிதாக வந்து மூளுமானாலும், அம்மூளுதலால், உண்டாகிய ஆகாமியவினை மறு பிறவிக்குவித்தாக நிலை பெற்றுத் துன்புறுத்தல் இல்லாது, தனக்கு வழியாகிய மாயேயத்தோடு, கெட்டு ஒழிந்து போம். இறைபணி நிற்கும் அவன் சத்தாயுள்ள சிவமேயாகின்றமையால், ஓரிடத்துப் பழைய பழக்கம் பற்றிப் பிறழ்ந்து போவதாயினும், தன்னைப் பிறழ

6 இவ்வியற்கை முயற்சியின் தோற்றக் காரணம் எல்லா வுயிர்களோடும் அம்மையப்பர் மருவி நின்று அவற்றைப் பக்குவப் படுத்தி வருமுண்மை.

(மே-ள்.) (i) "மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க."*

(ii) "அத்தாவுன்னடியேனை அன்பால் ஆர்த்தாய்; அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக்கொண்டாய்"†

7 அம்மையப்பரிருப்புக்கு ஒரு சான்று, பிண்டத்திலுள்ள 5 பூதங்கட்கும் அண்டத்தில் பேராதாரம் இருப்பது போல் நம் சிற்றறிவுக்குப் பேரறிவு ஒன்று ஆதாரமென்னும் அநுமானம்.

(ii) மெய்யுணர்ந்த சான்றோர் அநுபவச் சான்றுரைகள் மிகப் பல. எல்லா ஆத்திக சமயங்களினும் சான்றுண்டு.

(அ) "சிந்தித்தெழுவார்க்கு நெல்லிக்கனியே."‡

(ஆ) "காயமிந்நாட்டிடைக் கண்டுகொண்டேனே."§

8 சமயவாழ்வு ஷை இயற்கைக்குறிக்கோளை உயிர்கள் அடைதற்கு இன்றியமையாத ஒழுக்கம். ஆண்டவனால் அமைக்கப்பெற்றது. அதைத் தடுக்கவுமுடியாது.

9 பல சமயங்களுள் ஒரு சமயப் பெருநெறி உறைந்துள்ளது. ஆன்மாக்கள் யாவும் ஒரு பெருங் குறிக்கோளை நோக்கிச் செலுத்தப் படுமுண்மை (உ-ம்) வயது, அறிவு, அநுபவம் தனி இயற்கைகளில் வேறு பட்டிருக்கும் மாணவர்களைப் பல்வேறு வகுப்புகளிற் பிரித்து வைத்து நடத்தும் பெருங் கலாசாலை.


10 இக்குறிக்கோளையோ அதை யடையும் நெறிகளையோ தடுக்கமுடியாது. அது ஆண்டவன் திடமாதலின் தடுத்தால் துன்பம் விளையும்.

(மே-ள்.) "ஒத்துச்சென்று தன் திருவருள் கூடிடும் உபாயமதறியாதே, செத்துப்போய் அருநரகிடை வீழ்வதற் கொருப்படுகின்றேனை."¶

11 சமய நெறியில் திருவருட் குறிப்பினோடொத்துச் செல்வதால் நமக்கும் பிறர்க்கும் இன்பம். சமயநெறி அன்பு நெறி இன்ப நெறி.

12 சமய வாழ்வின் பொது அமைப்புகளாக்கச் சித்திரம்.

கடவுள்



<——

நாம் ——> பிறவுயிர், உலகம்.

முப்பொருளும் ஒன்றோடொன்று தொடர்புடையவாதல். தொடர்பை யுணர்ந்து, அவ்வுணர்ச்சி வழி நடந்து இன்படைதல் சமய வாழ்வின் பண்பும் பயனுமாதலின், சமயவாழ்வு மக்கள் வாழ்விற்கு அவசியம்.

* திருவாசகம். † அப்பர் திருத்தாண்டகம். ‡ தேவாரம். § திருமந்திரம். ¶ திருவாசகம்.



# IV

## ச ம ய வா ழ் க் கை

1 இக்காலத்தில் சமயவாழ்க்கையில் அசட்டை, வெறுப்பு, கண்டனம்; நவநாகரிகர் சொல்வன:

(i) 'சமயத்தைக் கவனிக்க நேரமில்லை.'

(ii) 'சமயம் பழைய அநாகரிக காலத்திற்குமட்டும் பொருத்தமானது, நாகரிக வளர்ச்சியைத் தடுப்பதாகலின் இந்நாட்குதவாது.'

(iii) 'மரணத்தின் பின் உயிரில்லை, கடவுள் வெறுங் கட்டுக்கதை, சமயம் என்ப தெதற்கு'?

2 சமய வாழ்க்கையைக் கைவிட்டதால், விளைந்து வரும் கேடு:

(i) பெரும்பாலார்க்கு வறுமையும் கவலையும் வளர்தல்—"சாந்த முலேக, சௌக்யமுலேது"*

(ii) உண்டுடுத் துறங்கிச் சிற்றின்பக் களியாடலில் திளைத்தலே மனிதவாழ்வின் பயனென்னும் கோட்பாடு மக்கள் வாழ்வில் பரவி வருதல்.

(iii) சுயநலத் தந்திரங்களும் பொய் வருக்கங்களும் பல்கி உலகைப் பெருந்துன்ப நிலையமாக்கிவருதல். சட்டங்களும் மசோதாக்களும் நிலைத்த நன்மை செய்ய முடியா தொழிதல்.

3 உண்மைச் சமய வாழ்வை வளம்பெறச் செய்தலின் அவசியம். நமக்கும் பிறர்க்கும் இன்பம் பெருகுதற்கு இதுவே வழி. கடவுளிருப்பும் மரணத்தின் பின்னும் உயிரிருப்பும்,—தற்காலப் பேரறிஞர் பலர் ஆராய்ச்சி வாயிலாகவும் சுட்டப்படுவன.

4 சமய வாழ்க்கை: சொற்பொருள் விளக்கம்.

(i) சமயம்=நன்றாகச் செய்யப்பட்டது, நெறி, வழி, மார்க்கம்—மார்க்கத்திற்குப் புறப்படுமிடம், போய் முடியுமிடம் உண்டு.

வாழ்க்கை=குறிக்கோளொன்றோடு கூடிய ஒழுகலாறு.

சமய வாழ்க்கை=உயிர்கள் தம் அறிவு, ஆற்றல், அன்பு, இன்பங்களைத் தடைப்படுத்தும் கட்டுகளிலிருந்து விடுபட்டு அந்நலங்களின் பூரண நிலைமையை அநுபவிக்கும் நிலையை அடைதற்கு என்று நன்றாய் அமைக்கப்பட்ட வழி. இது உலகத் தொடர்பை அறவே ஒழித்துவிட் டியங்குவதன்று. (மே-ள்) "நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும் வென்றானை" (அப்பர்) "I am in the world, but not of the world."†

(ii) சமய நெறி வகுத்தது யார்?

கடவுள் - தாமே நேராகவும், தமது சிறந்த மெய்யடியார் வாயிலாகவும், (மே-ள்) "ஐவகை எனும் பூதமாதியை

* தியாகையர் கீர்த்தனம். † Jesus christ.



187166.

வகுத்து....சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து
மேல் சமயங்கடந்த மோன சமரசம் வகுத்த நீ"*

(iii) சமய நெறியிற் செல்லற்குரியார் : (இவ்வுலகில்) மக்கள்.
பலதிற பக்குவமுள்ள ஆன்மாக்க ளுண்மை : குறிக்கோளில் கருத்து மாறுபாடுகள். அவரவர் தேவைக்கும் ஏற்ற படிகள் சமய நெறியி லுண்மை.

5 சீரிய நிலையில் சான்றோர் பால் நிகழும் சமயவாழ்வின் இயல்புகள் :
ஐம்புல அடக்கம் - "ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞான"‡ முடைமை.

(i) காணப்படும் பிரபஞ்சத்தோடு சாமானியர்க்குக் காணப்படாப் பிரபஞ்சத்தினிருப்பையும், உணர்தல் - அறிவியல் நூலும் இந்த நுண்ணுலக இருப்பைக் குறிக்கும். யோகக் காட்சியில் இது இனிது புலப்படும்.

(ii) வேற்றுமையினிடையே ஒற்றுமை யிருப்பை—பிரபஞ்சம் ஒரு திட்டத்தின்படி அமைந்து இயங்கி வருதலை—உணர்தல்.

(மே - ள்) (அ) "யாதும் ஊரே........"†

(ஆ) "குற்றநீ குணங்கள் நீ கூடலாலவாயிலாய்" ‡

(இ) "The births of both the individual and species are equally parts of the grand sequence of events which the mind refuses to accept as the result of blind chance. The understanding revolts from such a conception.—*Darwin*.

(iii) கடவுளே உலகுக்குயிராயிருத்தலையும், உயிர் வகைகள் ஒன்றற்கொன்று தொடர்புடையனவா யிருத்தலையும் உணர்தல்.

(மே - ள்) "உலகுக்குயிராயவன்".||

"தாய் தந்தை பல்லுயிர்க்குந் தாமேயாய தலைவனார்"||

"உரைசேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்[றான்"‡

"தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக் கிச்சைவைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது"*

"அவனன்றி யோரணுவு மசையாது"*

(iv) அதனால் திருவருட் குறிப்பின் வழியே வாழ்வை நடாத்தல்.

(அ) 'Practice of the Presence of God' by Brother St. Lawrence.

(ஆ) விவேகாநந்தர் தம் கையைத் தூக்குவதும் கடவுளே என்று ஒருகால் கூறியமை.

"கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு

* தாயுமானார். † புறநானூறு. ‡ சம்பந்தர் தேவாரம். || அப்பர் தேவாரம்.



போமாறமைமின், பொய்நீக்கிப் புயங்கனாள்வான்
பொன்னடிக்கே"*

(v) மனத்தின் சமநிலையும் பற்றின்மையும், மனத்துக்கண்மாசின்மை.

"கேடுமாக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" †

(vi) அஞ்சாமை.

"விண்பா தலம்புக்கு விரிகடல் மூடி
..............கழலடியே"*

"அஞ்சுவதியா தொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை"||

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்"||

"பூதமைந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர்பாகர் மலர்த்தாள் மறப்பிலார்"†

"ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ"†

"மரணப்ர தாபம் நமக்கில்லை"§

(vii) அகந்தையின்மை—ஆத்ம நிவேதனம்‡ செய்துவிட்டமையால்.

(அ) "சங்கவெண் குழையோர் காதிற் கோமாற்கே நாமென்றும் மீளாவாளாய்க் கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகினோம்" ஆதலினாற்றான், "நாமார்க்கும் குடியல்லோம்."

(ஆ) "வேண்டத் தக்க தறிவோய் நீ—"* [(அப்பர்)

(இ) "யான் எனதெனும்சொல் இரண்டுங் கெட்டாலன்றி
யாவருக்கும் தோன்றாது சத்தியம்..........."

(viii) அருளுடைமை: நால்வர் அவதரித்தமை-அவரருள் வாழ்க்கை. ஹரதத்தர் சிவபூஜை விசேட நிகழ்ச்சி.

"அறிவினா லாகுவதுண்டோ பிறிதின்நோய்
தன்நோய் போற் போற்றாக் கடை?" (திருக்குறள்)

"We that are strong ought to bear the infirmities of the weak"—*St. Paul*.

(ix) பேரின்ப அநுபவம்.

(மே - ள்) "கோற்றேனெனக் கென்கோ குரைகடல் வாயமுதென்கோ"*

"அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்"*

"அறுமுகவா சொல்லொணா திந்த ஆனந்தமே"¶

(x) திருவருள் ஏவல்வழி அற்புதங்கள் ஏகதேசமாய் நிகழ்தல்.

(அ) இறைவன் அடியார்க்குப் புரியும் அருட்செயல்கள்.

(ஆ) அடியார்கள் புரியும் அற்புதங்கள்.

(உ - ம்) நால்வர் வாழ்வில் காணக்கிடக்கும் பல செய்திகள்.

6 இத்தகைய அடியார்கள் 'பித்தர்கள்' எனில், அவர்போற் பித்தராதலினும் சிறந்த பேறு 'உலகப் பித்தர்கள்' பெற்றதுண்டோ?

* திருவாசகம். † பெரியபுராணம். ‡ திருவாசகம் குழைத்த பத்து காண்க. ¶ கந்தரலங்காரம். || அப்பர். § அருணகிரியார்.

பெரும் செல்வர், இராஜதந்திரிகள், முடிமன்னர்கள், நவநாகரிகர் படும் அவலக்கவலை, கையாறு: அழுங்கல் காண்க.

குருகர் (Kruger) தற்கொலை, முதலிய பல கோர உதாரணங்கள்.

7 சமயவாழ்வைத் தொடங்கிச் செவ்வனே நடத்தும் உபாயங்கள்.

(i) முப்பொருள் தொடர்பை அபர அறிவு, நம்பிக்கையளவில் அறிதல்.

(ii) ஆன்மலாபம் அடைய உலகை ஒரு கருவியாகக் கோடல்.

(iii) ஒவ்வொருவரும் தத்தம் அறம் (தருமம்) ஈதென ஆய்ந் தறிந்து அதை நடத்தல்—நாளடைவில் சற்கருமபலனைச் சிவார்ப்பணஞ் செய்யப்பழகல். மே - ள் "வேண்டி வினை செயேல்"* "என்கடன் பணிசெய்து கிடப்பதே."†

(iv) எந்த வேலையாயினும் தன் தருமமாயிருந்து திரிகரண சுத்தி யுடன் செய்யப்படின், அது பரிசுத்தமானது, சிறந்தது என மதித்தல்.

(v) தியாக வுணர்ச்சியையும் செயலையும் வளர்த்தல் - கடவுள் " தியாகராஜர். " தியாக மின்றேல் உலகமில்லை. " ஒப்புர வினால் வருங்கேடெனில் மற்றது விற்றுக்கோள் தக்க துடைத்து"‡

(iv) உண்மை இல்லறம் இத் தியாகவாழ்வை வளர்ப்பதாதலின் அது இடைஞ்சலன்று—இல்லறத்து நாயன்மார்களும் பிற பக்தர்களும்.

(vii) பிறப்புச் சாதி சமய வாழ்வில் மாண்டுபோதல், சகோதரத் துவச் செயல்.

8 இவ்வுபாயங்கள் கிடக்கும்வழி.

(i) சாதுசங்கம்: "தொண்டரொடு கூட்டுகண்டாய்"‖

(ii) ஆழ்ந்து பரந்த நோக்கத்தை யுடைய கல்வி.

(iii) சமயப் புற வொழுக்கங்களைப் பொருளுணர்ந்து பத்தி விசு வாசத்தோடு செய்து வருதல்—சரியை கிரியையாதி நாற் பாதங்களில் தாம் தொடங்கவேண்டியதில் தொடங்கித் திண்ணமாய் மேற் செல்லல்.

(iv) சைவர்க்கு: விபூதி ருத்ராக்ஷ பஞ்சாக்ஷர சடாக்ஷர சிவாலய சேவை.

(v) சிறந்த பெண்மக்கள் தரும் பரிசுத்தமான ஊக்கம்.

(vi) நாடோறும் இறைவனை நோக்கிச் செய்யப்படும் உண்மை வழி பாடும் முறையீடும்.

(vii) தக்கோர் செய்யும் சமயப் பிரசாரம்.

9 சமய வாழ்வை உலகில் வளர்க்கவேண்டிய ஸ்தாபனங்கள்:

(i) கோயில்கள்.

* ஆத்திசூடி. † அப்பர் தேவாரம். ‡ திருக்குறள். ‖ தாயுமானுர்.



(ii) மடங்கள்.

(iii) சமய சபைகள்.

10 இப்போது இந்நான்கும் அடைந்துள்ள நிலைமை

11 இவற்றைச் சீர்திருத்த வேண்டிய அவசியம்.

12 ஆஸ்திக சமயத்தாரனைவரும் ஒத்துழைத்தலின் அவசியம். அவ்வச் சமயிகள் சிறப்புக்கடமைகள்.

# மறைஞான சம்பந்தர்

[இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை திருவாரூர் - சோமசுந்தர தேசிகர்]

(இதழ் எ - கஅச - ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் இயற்றியனவாகக் காணப்படும் நூல்கள் பல. பதிபசுபாசப் பனுவல் என்னும் சித்தாந்த நூலின் பாயிரம்,

" காரூர் பொழிலுந் தேரூர் வீதியும்
வீதியின் மூவா யிரவர் விளக்கமும்
மாதவர் கூட்டமும் மீதுறை தில்லையிற்
கனக சபையிற் பனக முனிவனும்
போத மிகுத்த புலிக்கான் முனிவனும்
மாதவ விரணிய வருமனும் இறைஞ்சத்
திருமா லயனிந் திரனிமை யோரும்
அருமா மறையால் அடிபணிந் தேத்தப்
பானு கம்பர் பணிலமும் வாண
னுை குடமுழ வாதியும் முழக்க
மாண்டகு மதுர வாய்மொழி யிடமாய்த்
தாண்டவம் புரிவோன் சரண கமலம்
புந்தி னுளுஞ் சிந்தனை பண்ணிய
வப்பதி தன்னில் அருங்குகை மடத்தில்
எப்பதி யோரும் ஏத்தவு மிருந்தோன்
இகமது தன்னிற் சுகனையொப் பானேன்
வெண்ணெயம் பதியில் மெய்கண்ட தேவன்
மண்ணிடை மீண்டும் வருதலொப் பானேன்
அருந்தமி ழுணர்வால் அகத்திய முனியெனத்
திருந்துதோல் காப்பியஞ் சிவமயஞ் செய்தோன்
ஆசில் வடநூற் போச ராசன்
ஆதி கமலா லயமுதற் புராணம்
ஓது மதியாற் சூதனை யொப்போன்
மூவர் முதலா முதியவர் பாடல்
ஆவ லுடனே யடங்கலு முணர்ந்தோன்
கலமிகு நூல்கள் காணு வித்துடன்
சிவதரு மோத்தரந் தமிழாற் செய்தோன்
ஆகம பண்டிதன் அருந்தவர் புகலும்

மோகமில் சாத்திர முழுது முணர்ந்தோன்
கண்ணிய தவமறை ஞானசம் பந்தன்
எண்ணிய முன்னூல் இயல்வழு வாம
லதிக சைவ வளவைமுன் காணப்
பதிபசு பாசப் பனுவல்செய் தனனே"

என்று கூறும். மேலும்,

'நிரந்தவர் சங்கற்ப நிராகரிக்கு மிந்நூல்
பரிந்துலகோ ருய்யப் பகர்ந்தான்—திருந்திமறை
யோங்கி விளங்க வுதித்தமனை யோட்டினன்பேர்
தாங்கினனுய்ந் தாகமுந் தான்'

எனவும்,

'செறிமா செறியும் பரமோப தேசம்
மறைஞான சம்பந்தன் வாக்கு'

எனவும்,

'முத்தி நிலையணுக்கள் சேர மொழிந்திட்டான்
சத்தியமெய்ஞ் ஞானசம்பந் தன்'

எனவும்,

'சைவ சமயநெறி சாற்றினன்சம் பந்தனுயிர்
மையலற வாய்க்க வாம்'

எனவும் அந்தந்த நூல்களின் இறுதியிற் காணப்படுகின்றன. இவைகளாலே, 1. தொல்காப்பியம், 2. சிவமயம் 3. கமலாலய புராணம், 4. சிவதருமோத்தரம், 5. பதிபசுபாசப் பனுவல், 6. சங்கற்ப நிராகரணம், 7. பரமோபதேசம், 8. முத்திநிலை, 9. சைவ சமயநெறி யென்ற நூல்கள் செய்தவர் மறைஞான சம்பந்தரென்பது விளங்கும். 'ஆதிகமலாலய முதற் புராணம் ஓது மதியாற் சூதனை யொப்போன்,' என்பதனாலே கமலாலய புராணமேயன்றி 10. அருணகிரிப் புராணமும் செய்துளார். அப்புராணத்தை யச்சிட்டு வெளியிட்ட சிதம்பரம் வாமதேவ முருகபட்டாரகரால் அவ்வாறு கூறப்பட்டுளது. இனி இவற்றையேயன்றி, 11. பரமத திமிரபானு, 12. இறைவ நூற் பயன் என்ற நூல்கள் இவர் செய்ததாகக் கூறப்படுகின்றது.

இவற்றுள்ளே தொல்காப்பியம் சிவமயம் என்பன இருநூல்களா, ஒரு நூலா என்பது விளங்கவில்லை. • இருவேறு நூல்களென்பது பெரியார் கொள்கை. அவற்றைப்பற்றிய விவரம் ஒன்றும் அறிதற்கில்லை.

கமலாலய புராணம் என்பது திருவாரூர் என்னுந் திவ்ய க்ஷேத்திரத்தின் பெருமையைக் கூறுவது. இதற்கு கமலாலயச் சிறப்பு என்று வேறொரு பெயருமுண்டு. 'தேட்டுற்றவர் துயக்கத்தினைத் தீர்த்தே சிவனருளைக் - காட்டுங்கதை யிதுவேயிது கமலாலயச் சிறப்பே' என்றும், 'தேசார்ந்துறு கமலாலயச் சிறப்பான விச்செய்யுளில்' என்றும் காணப் படுவதால் இது வலி பெறும். இந்நூல் கத கலியப்தம் 4647-க்கு சாலிய வாகன சகம் 1469-ஐ யடுத்த 1470 பராபவ ஆண்டில் இயற்றப்பெற்றதென்பதும், இயற்றிய காரணமும்,

ஆண்டுகலி யுகத்துக்கு நானூற்று முப்பத்தீ ராயி ரத்து
மீண்டியமா லாயிரமு மறுநூறு மெண்ணைந்து மேழுஞ் செல்லப்



பூண்டபரா பவவாண்டின் மகரத்திற் புதத்திரயோ தசிபூர் வத்திற்
காண்டகுதிங் களின்மாளின் மயேந்திரத்திற் கவுலவமென் காணந் தன்னில்.

பொருவரிய திருவாரூர் புற்றிடங்கொண் டருண்மூலட் டான னென்னும்
பரமசிவன் பாங்கான சன்னிதிக்கு வாமதலப் பாகந் தன்னிற்
றிரமுறுதே வாசிரய மண்டபத்துப் பரமசிவன் வாக்கைத் தேர்ந்து
தருமமுத னெறியுணர்த்துஞ் சைவரும்மை நீகருமுறுஞ் சங்கந் தன்னில்.

அருமறைக ளொருநான்கு மாகமங்க ளெழுநான்கு மங்க மாறுந்
திரிவறவா ராய்ந்துசிவ மானபரமன் தெய்வமெனத் தெளிந்த சைவர்
பொருவரிய சிவனூர் புற்றிடங்கொண் டருள்புரிந்த புகழை யெல்லா
முரைசெய்யு மாரியத்தின் பொருடமிழா லுணர்த்துகவென் றுரைக்கச் சொல்வாம்.

என்பதாற் பெறுகின்றோம். இந்நூல் உ0 சருக்கங்கள் கொண்ட 1065 செய்யுட்களையுடையது. அச்சருக்கங்களாவன :—

இந்நூ லுள்ளே காண்க மாயனு மிமையோர் கோனுஞ்
செந்தழ லோம்பி வேள்வி செய்பொழு துதித்த வில்லை
முந்திமால் பற்றி மோகித் திழத்தலு மூர்த்தர் தன்னை
சிந்தனைக் கரியான் புற்றிற் றிகழ்ந்துசோ பித்த வாறும்.

தேங்க மலத்து வாழுந் திருமக ணிரி ஞூறும்
பாங்குற வலரி ஞூலும் பரமனைப் பூசனை பண்ணி
யோங்கிய புகழான் மாய னுகந்தெனைப் பாரி யாகத்
தாங்கிடும் வரத்தை யீச தருகெனச் சமைத்த வாறும்.

தாணுவைச் சமர்க்கா ரன்றூன் றூழ்ந்தரிச் சித்த வாறும்
வாணிகன் மன்ன னுக வரம்பா னளித்த வாறும்
சேனுனார் மண்ணி லுளாருந் திகழ்சிவ லிங்கந் தாபித்
தேனுறும் விதியாற் பூசை செயச்சிவ னிரங்கு மாறும்.

புத்திரன் தன்னை வேண்டிப் பூசனை புரிந்தான் மாயன்
வித்தகன் தன்னை யந்த விக்கிர கத்தை விண்ணின்
வைத்தபி னருளாற் பூசை வாசவன் புரிந்து பின்னை
யித்தலத் தரையன் றூபித் திறையுல கேய்ந்த வாறும்.

கோகனர் புரிந்த பூசை கொண்டருள் கொடுத்த வாறும்
போகவுட் டபன சித்தன் புதல்வனைப் பெற்ற வாறும்
மோகமுங் குலீசன் றீர்ந்து முனைப்பிளைப் பற்ற வாறும்
மூரனூ ரூரைச் சூழ்ந்து முடிமன்ன னான வாறும்.

மண்ணுறு மனிதர் தம்மை வானவ ராக்கி மன்னும்
விண்ணுற விருத்துந் தேவ தீர்த்தமும் விரும்பி மூழ்கிற்
பண்ணுறப் பனுவ லாட்டி பாத்திய தீர்த்தந் தானுங்
கண்ணுத லுலகங் காட்டுங் கயாசிரக் கயத்து னீரும்.

சுற்பய னிட்டை யென்றே நவின்றிடுந் தீர்த்தந் தானு
மற்புதப் பொய்கை மூன்றுங் கவுசிக னுகத் தான
முற்றுமோர் சித்த ரூரு மூன்றரைக் கோடி தீர்த்தம்
பற்றிடும் பதிதா னுஞ்சமிச் சிரமுதற் பாரா கீரும்.

திரம்பெறு வலிவனுன் தசரதன் சேர்ந்தி......கேதான்
புரிந்தருந் தவங்க டன்னைப் புதல்வனைப் பெற்ற வாறும்

விரிஞ்சனும் விரைந்து வந்து வேள்வியை விளைத்த வாறும்
மருந்தவ ரரிச்சித் தீச னடியடைந் தமையுஞ் சொல்வாம்.

1. வளம்பகர் சருக்கம், 2. பசுபதி புற்றிடம்பற்றிய சருக்கம், 3. பதுமத்திருமகள் பரவிய சருக்கம், 4. அசலேசச் சருக்கம், 5. ஆனந்தேசரச் சருக்கம், 6. சிவலிங்கத் தாபனச் சருக்கம், 7. சோமாக்கந்தச் சருக்கம், 8. கோகன்னச் சருக்கம், 9. சித்தேசுரச் சருக்கம், 10. குலிசேசச் சருக்கம், 11. வணிகனூர் வலம்வரு சருக்கம், 12. தேவதீர்த்தச் சருக்கம், 13. சரசுவதி தீர்த்தச் சருக்கம், 14. கயாதீர்த்தச் சருக்கம், 15. நற்பய னிட்ட தீர்த்தச் சருக்கம், 16. புட்கர தீர்த்தச் சருக்கம், 17. விசுவாமித்திர குண்டச் சருக்கம், 18. சர்வ தீர்த்தச் சருக்கம், 19. தசரதச்சருக்கம், 20. விரிஞ்சன் வேள்விச் சருக்கம், 21. மருத்துவச் சருக்கம் என்ற பகுப்பினை யுடையது. இதுவரை அச்சேறவில்லை.

அருணகிரிப் புராணம் 'மருவளர் பொழில்சூ ழண்ணா மலைமணி பூரம்' என்று பேர்பெற்ற திரு அண்ணாமலையின் பெருமையைக் குறிப்பதாகும். இதனைச் செய்யத்தொடங்கிய காலம் கத கலியப்தம் 4654-க்கு வர்த்தமான சாலிய வாகன சகம் 1477, கி. பி. 1555. பிரமாதீச ஆண்டு தைத்திங்கள் ஏகாதசி திதியோடு கூடிய ஞாயிற்றுக் கிழமையாகும் என்பது,

ஆண்கலி யுகத்தினுக்கு ஞானூற்று முப்பத்தி ராயி ரத்து
மீண்டுறுசா லாயிரமு மறு நூறு மைம்பத்து நான்கு நீங்க
வீண்டபிர மாதீச வாண்டின்மக ரத்தெழுவா யேகா தேசி
தீண்டிரவி வாரத்தின் மான்மாகேத் திரம்வணிகத் திகழும் போதில்

என்ற அருணகிரிப் புராணம் பாயிரம் உகூ-வது செய்யுளால் தெளிவாம். இப்புராணம், காப்பு பாயிரங்களோடு, திருநாட்டுச் சிறப்பு, அருணாசலோதயச் சருக்கம், அருந்தவச்சருக்கம், வலம்புரிச் சருக்கம், ஆலயத்தொடு புரியாக்கிய சருக்கம், தாரபதி புழுகு சாத்திய சருக்கம் என்னும் ஐந்து சருக்கங்கள் கொண்ட கூகூ திருவிருத்தங்களாலாயது. இது அச்சிடப்பட்டுள்ளது.

சிவதருமோத்தரம் என்னும் நூல் சைவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்றான சந்தான சர்வோத்தமம் என்னும் மூலாகமத்தின் உபபேதம் பதினாறனுள் ஒன்று என்பர். இது 1. பரமதருமாதியியல், 2. சிவஞானதானவியல், 3. ஐவகை யாகவியல், 4. பலவிசிட்ட காரணவியல், 5. சிவதருமவியல், 6. பாவவியல், 7. சுவர்க்க நரக வியல், 8. சனன மரண வியல், 9. சுவர்க்க நரக விசேட வியல், 10. சிவஞானயோக வியல், 11. பரிபாக வியல், 12. கோபுர வியல் என்ற பன்னிரண்டு பகுப்பினோடு கூஉகஅ செய்யுட்களை யுடையது. இந்நூலின் ஈற்றில்,

முன்ன மாதி முருகன் முனிவர்க்குப்
பன்னி ராயிர மாகப் பகர்ந்தன
னன்ன வுத்தர மாயிரத் தெட்டனை
றென்ன மாமுனி வன்செய் தியம்பினன்.



அந்த வாக்கினை நோக்கி யருகருஞ்
சிந்த வாதுசெய் தேசிக ஞானசம்
பந்த னுமம் பரித்தோ ரெருசதஞ்
சந்த நான்குநா லேம்பதஞ் சாற்றினன்.

என்று காணப்படும். இந்நூல் அச்சிடப்பட்டிருக்கின்றது.

பதிபசு பாசப் பனுவல் என்பது சைவசித்தாந்தத்தைப்பற்றிக் கூறும் ஒரு சிறு நூல். இது பாயிரம், பிரமாண வியல், பதிசாதன வியல், பசுசாதகவியல், பாசசாதகவியல், பொதுவியல், போதக வியல் என ஆறு அங்கங்களோடு கூடிய கூகூ குறள் வெண்பாக்களை யுடையது. இதனை இந்நூலின் ஈற்றிற் காணும்,

பிரமபுரத் தீசன்பால் பேதை முலைப்பாலைப்
பருகிய பாலன்பேர் பரித்தோன்—நிருமலன்சொல்
லாய்ந்துரைத்த செய்யுள்வகை மூந்நூறு மாறுறு
மேய்ந்ததனை பகுவர்க்கென் றெண்.

என்ற வெண்பா நனி விளக்கும். அச்சிடப்படவில்லை.

சங்கற்ப நிராகரணம் என்பது மற்றொரு சைவசித்தாந்தச் சிறு நூல். இத[illegible]மாபதி சிவமியற்றிய சங்கற்ப நிராகரணம் போன்றது. குறள் வெண்பாவாலானது. சஉக செய்யுட்களையுடையது. இந்நூலின் முடிவிற் காணப்படும் 'நிரந்தவர் சங்கற்பம்' என்ற செய்யுள் முன்னர்க் குறிக்கப்பட்டது. இதுவும் இன்னும் அச்சாகவில்லை.

பரமோபதேசம் என்பது நூலின் பெயற்கேற்ப சிவபெருமானே கடவுள் என்றும், அவனை அடைவதுவே பேரின்பம் என்றும் போதிக்கும் நாற்பத்தொரு குறள் வெண்பாக்களாலாய ஒரு சிறு நூல்; அச்சிடப்பட்டிருக்கின்றது.

முத்திநிலை என்பது மற்றொரு சைவசித்தாந்தச் சிறு நூல். இதுவும் சிவபெருமானை யடைந்து உய்வதே பெருமை யென்று கூறுவது. இன்னும் அச்சிடப்படவில்லை.

சைவ சமயநெறி என்பது ஆசாரியரிலக்கணம், மாணாக்கரிலக்கணம், பொது விலக்கணம் என்ற மூன்று பகுதியுடையது. எஉஎ குறள் வெண்பாக்களாலாயது. சைவர்கள் அறியவேண்டிய எல்லா விடயங்களும் அடங்கியுளது. அச்சிடப்பட்டிருக்கின்றது. இவ்வளவே இவர் இயற்றியனவற்றில் விவரம் தெரிவன.

பரமதத்திமிரபானு என்பது மற்றொரு சைவசித்தாந்த நூல். பரமதத்தை யொழிக்குஞ் சூரியன் யென்பது பொருள். இதுவும் குறள் வெண்பாவாலியன்றது. இந்நூலிலிருந்து மறைஞான முனிவர் தமது சித்தியாருரையில் மேற்கோள் காட்டி யிருக்கின்றார். நூல் முழுவதும் காணப்படாமையின் இவர் இயற்றியதாகக் கூறுவதற்குச் சான்றில்லை.

இறைவ நூற்பயன் என்பதும் குறள் வெண்பாவானியன்ற ஒரு சிறு நூல் என்பது தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை.

சகலாகம சாரம் என்பது சைவாகமங்களின் சாரமாக உள்ளதென்று பொருள்படும். அது அச்சேருததால் அதனைப்பற்றிய விவரமொன்றும் அறிதற்கில்லை. நூலும் இராசாங்கப் புத்தகப் பட்டியைத் தவிர்த்து மற்றைய புத்தகப்பட்டிகளில் இருப்பதாகக் குறிக்கப்படவுமில்லை. இனி இவர் பேரால் காணப்படும் நூல்கள் பலவெனவும், அவை இவையெனவும் முன்னர்க்குறிக்கப்பட்டிருக்கின்றது.

மகாசிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், வருத்தமற வுய்யும் வழி, உருத்திராக்க விசிட்டம், திருக்கோயிற் குற்றம் என்ற இந்நூல்கள் மறைஞானசம்பந்த நாயனார் இயற்றியனவாக இந்நூல்களை வெளியிட்டவர் கூறினரேயன்றி அக்கூற்றுக்கு உள்ள ஆதாரமொன்றும் நூல்களிற் காணப்படவில்லை; அவரும் காட்டினரல்லர். உருத்திராக்க விசிட்டத்தின் இறுதியில்,

சாற்றினனே கண்டிவாக் தன்னையெனிச் சம்பந்த
னூற்றினையுஞ் செஞ்சடைமே லார்வித்தான்—கூற்றினைக்கொன்
றந்தணனைக் காத்தா னமர்ந்திலங்கு தில்லைவனத்
தந்தமில்லான் தண்ணருளா லாய்ந்து.

என்று ஒரு வெண்பா காணப்படுகிறது. இச்செய்யுளை யுற்றுநோக்கும்போது ஆசிரியர் தோத்திரமாகக் காணப்படுகிறது. 'சிதம்பரத்தின் கண்ணே வாழும் சம்பந்தன் அருளுட்கொண்டு கண்டிநூல் சாற்றினேன்' என்று அச்செய்யுள் காட்டுகிறது. ஆகவே இந்நூலையும் அந்நூலொடு சேர்ந்து காணப்படும் கற்பநூல்களையும் இயற்றினவர் சம்பந்தர் என்ற ஒருவரது மாணாக்கர் எனக் கொள்வதும் தவறாகாது.

சிற்றம்பல நாடிமாலை யென்னும் நூலொன்று மறைஞான சம்பந்த நாயனார் இயற்றியதாகக் கற்பநூற் பதிப்பாசிரியர் ஈ. இரத்தினவேலு முதலியார் எழுதி யிருக்கின்றார். சிற்றம்பல நாடிகள் உமாபதி சிவத்திற்கு நான்கு தலைமுறைக்குப் பின்காணப்படுவதால் அவர் உமாபதி சிவம் வாழ்ந்த கி. பி. 1328-க்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந்தவரென்று கொள்ளலாம். இதனாலே சிற்றம்பல நாடிகளைப் பாமாலையால் துதித்தவர் அவர் காலத்தவராய் இருக்கவேண்டும். சிற்றம்பல நாடிவெண்பா என ஒரு நூலுண்டு. 66 செய்யுட்களுடையது. அதுவாக இருந்தாலு மிருக்கலாம். பின்வந்தோர் முற்காலத்து வந்தோரைத் துதிப்பதில்லையா? திருவாவடுதுறை ஆதி குருமூர்த்தியாகக் கருதப்படும் நமசிவாய மூர்த்திகளைப் பஞ்சாக்கர தேசிகர் மாலை, பஞ்சாக்கரப் பஃறொடை முதலிய நூல்களாற் சென்ற நூற்றாண்டிலிருந்தார் துதிக்கவில்லையா? கி. பி. பத்தாம் நூற்றாண்டிருந்த நம்பியாண்டார் நம்பி பல நூல்கள் இயற்றவில்லையா? அவ்வாறிருக்க, இஃது எவ்வாறு பொருந்துமென வினவெழுமாயின், அவ்வாறு ஓர் அன்புடையார் இருந்தனர் என்று காட்டும்வரை அச்செய்தி பொதுவாக ஒப்புக்கொள்வது வழக்காறன்று.

பஞ்சாக்கரமாலை காழிக்கண்ணுடைய வள்ளல் பெருமானால் பஞ்சாக்கரத்தைப்பற்றிச் செய்யப்பட்டதொரு நூல். இந்நூல் மூலமும் உரையுமாக அச்சிடப்பட்டிருக்கின்றது.



இதுகாறும் கூறியவற்றால் சிதம்பரத்தின் கண்ணே வாழ்ந்த மறைஞான சம்பந்தர் இயற்றிய நூல்கள் இவையென்றும், அவை கூறும்பொருள்கள் இவையென்றும் கண்டாம். இனி அவர் பெயர் எவ்வாறு வழங்கிற்றென்று விசாரிப்போமாயின் நூல்களில் மறைஞான சம்பந்தரென்றே வழங்கி வந்தமை மேலே குறித்துள்ள பாயிரச் செய்யுள்களால் புலனும். சைவ சமயநெறியை யச்சிட்ட ஆறுமுக நாவலர் அதனில் நாயனார் என்ற அடைமொழி சேர்த்து அச்சிட்டார். அருணகிரிப் புராணம் அச்சிட்ட வாமதேவ முருகபட்டாரகர் மறைஞானதேசிக ரென்று அச்சிட்டார். இவர் மடாதிபதியாக விருந்தமை நோக்கித் தேசிகரெனச் சேர்த்தனர் போலும். நாயனார் என்றது பெருமைபற்றிப் போலும். ஆகவே மறைஞான தேசிகர், மறைஞான சம்பந்த நாயனார் மறைஞான சம்பந்த தேசிகர் என்ற பெயர்களெல்லாம் சிதம்பரத்திலே குகைமடம் என்னும் கண்கட்டி மடத்தில் வாழ்ந்த மறைஞான சம்பந்தரையே குறிக்கும். குகை மடம் என்பதைப் பற்றி விசாரிக்கும்போது திரு அண்ணாமலையில் எழுந்தருளியிருந்த குகை நமசிவாய மூர்த்திகள் அருமைச் சீடரான குருநமசிவாயர் பொன்னம்பலத்தின் கண்ணே எழுந்தருளியிருந்த ஞான்று அவரது அடியார் பலர் ஒன்று கூடி ஏற்படுத்திய மடமாக விருக்கலாமெனத் தெரியவந்தது. அன்றி குகை நமசிவாயர் ஞாபகமாக எழுந்த மடமாக இருத்தலுங்கூடும். அஃதெவ்வாறாயினும் நமது ஆசிரியர் மறைஞான சம்பந்தர் அந்த மடத்தின் ஆசாரிய பரம்பரையிற் றோன்றியவரென்று கொள்ளுதல் தவறாகாது. நாட்டில் நடக்கும் தீங்குகளைக்கண்டு மனம் பொறாது முதலில் திரை மறைவிலிருந்தும், மேலும் மேலும் நடக்கும் தீமைகளைக் கண்கொண்டு பார்க்கச் சகியாது தமது இருகண்களையும் துணிகொண்டு இறுகக்கட்டி வாழ்ந்ததால் அவர் இருந்த மடத்திற்குக் கண் கட்டி மடம் எனவும் வழங்கலாயிற்று.

இவர் கமலாலய புராணம் பாடியது கலி 4648 ஆகும். அருணகிரிப் புராணம் பாடியது கலி 4655 ஆகும். இவை முறையே ஆங்கில ஆண்டு 1548, 1555-ஐக் குறிக்கும். இஃதன்றி இவரது வழியில் வந்தவராகக் கருதப்படும். பிராயச்சித்த சமுச்சயம் என்னும் நூலுடையார் தமது குரு மரபு துதியாக,

தங்கு முலகம் பரவுதிரு விசைப்பா வுரைத்த தலைவருமென்
பங்க மெனவுற் றிடுமறுபத் தொடுமூ வருமா கமத்தமிழ்செய்
திங்க ளுரிஞ்சு மணிமாடத் தில்லைக் குகையிற் றிரைபோட்டுப்
பங்க மறவாழ் மறைஞான சம்பந் தனுமெம் பதியாவார்.

என்று கூறியது, மலையமுனிக்கொப்பான, நித்தியகன்மங் தவறாச் சீலராம்

அன்னவர் தந்திருவாக் கென்றலை மேற்கொண்
டாண்டான கொல்லமெண் ணூற்றெட் டாங்கி
வென்னுமுறு வருடமுத் தராய ணத்தி
லெழிலுறுரும் பத்தில்வளர் பக்கந் தன்னிற்

பின்னுபுத வாமகம் பருவக் தன்னிற்
பதிஞான ப்ரகாசன் பாதந் தன்னை
புன்னியுளத் தறிந்தபடி யுரைத்தேன் கல்வி
யுடையோர்கள் பொறப்பரெனு முறதி யாலே.

என்பதால் கொல்லம் 808க்கு கி. பி. 1632 ஆகும். இவைகளாலே மறை ஞான சம்பந்தர் பதினாறும் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவராவா என்பது நிலைபெறும்.

ஆகவே, இதுவரை செய்த ஆராய்ச்சியின் பயனாக மறைஞான சம்பர் தர் என்ற பெயருடையார் மூவரென்பதும், சந்தான குரவர் முதல்வரென் பதும், சிதம்பரம் குகைமடத்திருந்து பல நூல்களைச் செய்த மறைஞான சம்பந்தர் பதினாறும் நூற்றாண்டினரென்பதும், சித்தியாருரை யியற்றிய மறைஞான தேசிகர் இவர்களுக்குப் பிற்பட்டவரென்பதும் பெற்றாம்.

# திருவகுப்பு

முருகப் பெருமான் திருவருள் கைவரப்பெற்றுப் பதினாறும் நூற்றாண்டில் திகழ்ந்த வரும் சிவாநுபூதிச் செல்வருமாகிய அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய 'திருவகுப்பு' என்னும் அரிய நூலுக்கு, மெது தமிழ்ப்போதாகாசிரியர் ஒருவர் குறித்து வைத்த குறிப்புகள் எமக்குக் கிடைத்தன. அவைகளைச் செப்பனிட்டு "சித்தாந்தம்" வாயிலாக வெளியிடத் துணிந்தேம். பின்னர் இது புத்தகரூபமாய் வெளிவரும். இவ் வுரையில் காணும் குற்றங்களைத் தமிழ்ப் பேரறிஞர் இப்பத்திராசிரியர் அவர்கட்கு எழுத வேண்டுகிறேன். [பெயர் விழையான்]

## திருஞான வேழ வகுப்பு

(a) சடலை பட்டலை யுடலெ னப்படு தரும சித்திர கூடமானவை
(b) தவிர நிட்கள வெளியி னிற்பன சமய தர்க்கவி ரோத வாதிகள்
(c) தகர வெற்றுவ புகர்ம தக்கிரி தனையு ருக்குவ ஆசையாணவ
(d) தளையி யற்கையை விடந டிப்பன சனன முற்றிய சாத மாமெழு வ
(e) கடல்க டப்பன படுகொ லைச்சமர் கடக மப்படி சாய மோதுவ
(f) கருவி னைத்தரு மிருவி னைத்தொடர் கழல்ப தத்தன யோக சாதகர்
(g) களைப றிப்பன கிளையெ னப்படு கவலை சுற்றிய காடு சாடுவ
(h) கருணை மெய்த்தவ திருவ ருட்கன கவளமொக்குவ காமராசனை ੭
(i) அடல்கெ டுப்பன அகில கற்பனை அரண ழிப்பன கோபமானவை
(j) அவிய நற்பொறை யெனுந திப்பிர ளயமி றைப்பன லோபமோகிதம்
(k) அவைமு றிப்பன மதமு ழுத்தறி அடிப றிப்பன ராசதாதியின்
(l) அதிகு ணத்ரய மதிலி டிப்பன அளவி றத்துவ தூளிவீசுவ து
(m) திடமு டைச்சிறை மயிலு கைத்தெழு சிகரி குத்திய வேலை நீள்சுனை,
(n) தினமு முற்பல மலர்தி ருத்தணி இறைதி ருப்புகழ் பாடு நாவலர்
(o) திரள்ப்ரி யப்பட இனித ளிப்பன செயலொ ழித்தநு பூதி மீமிசை
(p) திகழு மற்புத மவுன நிர்க்குண சிவம யத்திரு ஞான வேழமே. க

சடலைபட்டு - சடத்தன்மையுளவாய் (அறிவற்று); அலை - வருந்துகிற; உடலெனப் படும் - உடம்பென்று சொல்லப்படும்; தருமம் - தர்மமாகிய (இயல்பாகிய); சித்திர கூட



மானவை - வேலைப்பாடமைந்த திண்ணைகளானவை; தவிர - கெட; நிட்கள வெளியில் நிற்பன - நிஷ்களமாகிய ஆகாயத்தில் நிற்பன; சமயதர்க்கம் - சமயக் கொள்கையைப் பற்றி வாதிக்கும்; விரோதவாதிகள் - பகைமையை யுடைய சமயவாதிகள்; தகர எற்றுவ - பொடிபடும்படி மோதுவன; புகர்மதக்கிரிதனை - குற்றங்களென்னும் மலை போன்ற மதயானைகளை; உருக்குவ - இளகவைப்பன; ஆசை ஆணவம் - ஆசையும் ஆணவ மலமுமாகிய; தளை இயற்கையை - இயல்பான கட்டுக்கள்; விட - விலக; நடிப்பன - நடனஞ் செய்வன: சனனம் - பிறத்தலாக; முற்றிய - சூழ்ந்த; சாதம் ஆம் எழு - ஏழென்னுந் தொகையுள்ள பிறப்பாம்; கடல் கடப்பன - கடல்களைத் தாண்டுவன; படு - இறப்பதற்குரிய; கொலைச்சமர்க்கள் தக - கொலைத் தொழில் நிகழ்கிற யுத்தகளங் கள் கெட; மப்படி சாய - தாமத குணத்தின் வேர் சாயும்படி; மோதுவ - தாக்குவன; கருவினைத்தரும் - பிறவியைத் தருகின்ற; இருவினைத் தொடர் - இருவினையாகிய சங் கிலிகள்; கழல் - நீங்கிய; பதத்தன - கால்களையுடையன; யோகசாதகர் - யோகத்தில் முயல்பவரது; களைபறிப்பன - துன்பங்களை வேரோடு களைவன; கிளையெனப்படு - உறவினரெனப்படும்; கவலை சுற்றிய - சஞ்சல உருவாய்வளைந்த; காடு-அரணியத்தை; சாடுவ - மோதி அழிப்பன; கருணை - அருளும்; மெய்த்தவம் - உண்மைத் தவமுமான; திருவருள் - திருவருளாகிய; கனகவளம் - பெரிய கவளத்தை; மொக்குவன - நிரம்ப விழுங்குவன; காமராஜனை - மன்மதனை; அடல் கெடுப்பன - வலியழிப்பன; அகில கற் பனை - உலக கற்பிதமாகிய; அரண் - காவலிடங்களை; அழிப்பன - தகர்ப்பன; கோப மானவை அவிய - கோபமென்னும் தீ கெட; நல்பொறை யெனும் - சிறந்த பொறு மை என்கிற; நதிப்பிரளயம் - ஆற்றுநீர்ப்பெருக்கை; இறைப்பன - வீசுவன; லோப மோகிதமவை - உலோப மோகங்களாகிய மச்சுமரங்களை; முறிப்பன - அழிப்பன; மதம் - மதமாகிய; முழுத்தறி - சிறந்த தறியை; அடிபெயர்ப்பன - அடியோடு பெயர்த் தெறிவன; ராசதாதியின் - ராஜச முதலிய குணங்களில்; அதிகுணத்ரயம் - சிறந்த முக்குணங்களாகிய; மதில் இடிப்பன - மதில்களைத் தகர்த்து விடுவன; அளவு இல் - அளவற்ற; தத்துவ தூளி - தத்துவங்களாகிய தூசை; வீசுவ - வீசுவன; திடம் உடை - உறுதியுள்ள; சிறை - இறகுகளையுடைய; மயில் உகைத்து - மயிலை ஊர்ந்து; எழு - பகைமையாய் எழுந்த; சிகரி - கிரவுஞ்ச மலையை; குத்திய - ஊடுருவத் துளைத்த; வேலை - வேலாயுதத்தை உடைய; நீள்சுனை-நீண்ட சுனையில்; தினமும் - நாடோறும்; உற்பலம் - நீல அல்லி; மலர் - மலர்கிற; திருத்தணியிறை - திருத்தணியில் வீற்றி ருக்கும் இறைவராகிய முருகக் கடவுளது; திருப்புகழ் - திருப்புகழை; பாடும் - பாடுகிற; நாவலர் திரள் - நாவலர் கூட்டம்; ப்ரியப்பட - விரும்ப; இனிது அளிப்பன - வேண் டியவற்றை இனிதாகத் தருவன; செயல் ஒழித்து - செய்கையை நீக்கி; அநுபூதி- சொந்த அநுபவத்தின்; மீமிசை திகழும் - மேல் விளங்குகின்ற; அற்புதம் - ஆச் சரியமான; மவுன நிர்க்குண சிவமயம் - ஞானவாம்புள்ளதும் முக்குணத் தொடர் பற்ற தும் மங்கள முள்ளதுமான; திருஞான வேழம் - சிறந்த அறிவாகிய யானைகள்.

குறிப்புக்கள் :—திரு - சிறந்த; ஞானம் - அறிவாகிய; வேழம் - யானை; அறிவை யானையாக உருவகப்படுத்தி அதன் செயலாகச் சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை வெளி யிடும் வகுப்பு இது; பிற ஆசிரியர்களும் மோகவதைப் பரணி, அஞ்ஞவதைப் பரணி, பிர போத சந்திரோதயம் (மெய்ஞ்ஞான விளக்கம்) முதலிய நூல்களில் இப்படியே குணங் களை உருவக அலங்காரம் அமையப்பாடி யிருத்தலும் நோக்கற்பாலது. 'பஞ்சமலங்காய்ந்த சிவஞானக் கடாக்களிறும்' என்று கந்தர் கலிவெண்பா நூலாசிரியர் கூறி யிருக்கின் றனர். 'ஞானமாமத நீர் சோர ஞான சம்பந்தரென்னும் - மானமாயானை வந்து கடம்ப மாவனத்திற்றுன்னும் - ஊனமாஞ் சமணரென்னுந் தருக்களை யொடித்து வெண்ணீறு - ஆனமாப் பூழியள்ளித் தூற்றிய தவனி எங்கும் (திருவிளையாடல் - சமணரைக் - 81) என்னும் செய்யுளும் ஈண்டு ஆராயற்பாலதே யாம். "ஆசை நிகளத்தினை நிர்த்தூளிபட

உதறி ஆங்கார மூளையை எற்றி, அத்துவித மதமாகி மதம் ஆரும் ஆருக அங்கையின் விலாழியாக்கிப் - பாச இருள் தன்னிழலெனச் சுளித்து ஆர்த்துமேல் பார்த்துப் பாந்த மனதைப், பாரித்த கவளமாய்ப் பூரிக்க உண்டு முகபடாமன்ன மாயை நூறித் - தேசு பெற நீ வைத்த சின்முத்திராங்குசச் செய்கைக் குளையடக்கிச் சின்மயானந்த சுக வெள்ளம் படிந்து நின் திருவருட் பூர்த்தியான - வாசமுறு சற்சார மீதென்னை ஒரு ஞான மத்த கஜமென வளர்த்தாய் மந்தர குருவே யோக தந்தர குருவே மூலன் மரபில் வருமௌன குருவே (தாயுமானவர்) என்னும் செய்யுளும் ஈண்டு நோக்கத்தக்கதே.

செயலொழித்து அநுபூதி மீமிசை (o) திகழும் அற்புத மவுன நிர்க்குண சிவமயத் திருஞான வேழம் (p) நிட்கள வெளியில் நிற்பன (b) விரோத வாதிகள் தகர எற்றுவ (c) புகர்மதக் கிரிதனை உருக்குவ (c) தளையியற்கையைவிட நடிப்பன (d) சாதமாம் எழு கடல் கடப்பன (e), சாயமோதுவ (e) இருவினைத் தொடர்கழல் பதத்தன (f) சாதகர் களை பறிப்பன (g) கவலை சுற்றிய காடு சாடுவ (g) திருவருட் கனகவளமொக்குவ (h) காமராசனை அடல் கெடுப்பன (i) கற்பனை அரணழிப்பன (i) பொறையெனும் நதிப் பிரளய மிறைப்பன (j) லோப மோகிதம் அவை முறிப்பன (k) தறியடி பறிப்பன (k) குணத்திரய மதிலிடிப்பன (l) தத்துவ தூளிவீசுவ (l) திருத்தணியிறை திருப்புகழ் பாடு நாவலர் திரள் பிரியப்பட இனிதளிப்பன (n) என்று இயைத்துப் பொருள் கூறுக.

**திடமுடைச்சிறை மயில்:**—தடங் கடலுடைய மேருத் தடவரை யிடியமற் றைப் - படித்தலம் வெடிப்பச் செந்தீப் பதைபதைத் தொடங்கச் சூறை - துடித்திட அண்ட கூடந் துளகுறக் கலாபம் வீசி இடித் தொகை புரள ஆர்த்திட்டு எகிற்றுத் தோகை மஞ்ஞை (கந்த - சூர்வதை 500)

**தினமும் உற்பலமலர் திருத்தணி:**—(1) காலைப்போதினில் ஒருமலர் கதிர் முதிர் உச்சி - வேலைப்போதினில் ஒருமலர் விண்ணெலாம் இருள்சூழ் - மாலைப்போதினில் ஒரு மலராக இவ்வரைமேல் - நீலப்போது மூன்று ஒழிவின்றி நிற்றலு மலரும். (கந்த-வள்ளி யம்மை 222) (2) வரங்கள் வேட்டுப்படர் விண்ணோர் மண்ணோர் நாகர் யாவர்க்கும் இரங்கியினிதுகை தூவாதீத்தல் கருதி எண்ணிறந்த - கரங்கள் படைத்தங்கு இருந்தது போற்காமர் வளங்கள் அனைத்தினுக்கும் - அரங்கமென வோங்கியு குன்றம் அழல் செய் காந்தண்மலர்ந்ததே (தணிகைப் புராணம் - நகர 134) திருத்தணி மலையின்கண் உற்பல மலர் தேவந்திரனால் தேவருலகத்தினின்றும் கொண்டுவரப்பட்டது என்பதனை (1) துறக் கம் வாழ்குவளை வாங்கிச் சுனையிடைக்கால மூன்று-முறுக்கவிழ் மலர்கண் மூன்று முகிழ்க் குமாகிருமித்திட்டேன் - நறைக்கடம் பணிந்தோய் நாளும் நயந்தணிந்து உலகமெல்லாம் இறக்குமந்நாளும் மன்னியிருக்க அக்கழுநீர் மாதோ (2) இம்மலரணியுங்காறும் ஏழையேற் கிடரின்றாக - செம்மனீ காட்சி தந்த திருத்தகுமிந்த நாளில்-பைம்மலர்ச்சுனை நீர் தோய்ந் தோர் பருகினோர் தெளித்துக்கொண்டோர் - வெம்மைநல் வினைகளோப்பி விளங்கு நின் னுலகம் சேர்க (திருத்தணிகைப் புராணம் - இந்திரனருள் - செய் 25.26, என்னுஞ் செய் யுள்கள் வலியுறுத்தும்.

**திருத்தணி என்பது செருத்தணி யென்பதன் மரூஉ:**—செங்கண் வெய்ய சூர்ச் செருத்தொழிலினுஞ் சிலைவேடர்-தங்களிற் செயுஞ் செருத்தொழிலினும் தணிந்திட்டே- இங்கு வந்தியா மிருத்தலால் செருத்தணி என்றோர் - மங்கலத் தருபெயரினைப் பெற்ற திவ்வரையே (கந்த - வள்ளி 216)

**மவுன நிர்க்குணம்:**—(1) வாயினாற் பேசா மௌனத்தை வைத்திருந்தும் - தாயி லார்போல் நான் தளர்ந்தேன் பராபரமே (பராபரக்கண்ணி - 56) சும்மா இருப்பதுவே சுட் டற்ற பூரணமென்று - எம்மாலறிதற்கு எளிதோ பராபரமே (கண்ணி 70) வண்டாய்த் துவண்டு மௌன மலரணைமேற் - கொண்டார்க்கோ இன்பங் கொடுப்பாய் பராபரமே (கண்ணி 110.)

# சைவரும் விக்கிரக ஆராதனையும்

[E. T. சோக்கம்மாள், B. A., L. T.]

மேல்நாட்டுப் புறச்சமயவாதிகள் நமது மதத்தைவிக்கிரக ஆராதனைச் சம யம் என்று பழிப்பதுண்டு. விக்கிரக ஆராதனை என்பது ஓர் உரு வத்தை நியமித்து அதையே கடவுளென வழிபடும் செய்கை. மேல்நாட்டு ஊர்களில் முன்னொரு காலத்தில் இத்தகைய வழிபாடு செய்ததுண்டு. அதை யூத சமயாசாரிகள் கண்டித்ததும் உண்டு. இதைக் கிறிஸ்தவ வேத புத்தகக் கதைகளிற் காணலாம். ஆனால் நமது கோயில்களிற் காணப்படும் விக்கிரகங்கள், ஒருவகை அறிகுறியாக வைக்கப்பட்டனவேயன்றி, அவற் றையே வழிபடவேண்டுமென ஏற்பாடு செய்தார் ஒருவருமில்லை.

“ குறிகளும் அடையாள முங்கோயிலும்
நெறிகளும் அவர் நின்ற தோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர்! மனம் என்கொல் புகாததே?”

என்றார் அப்பர். எனவே, அங்கு உள்ள பொருள்கள், வழி பாட்டுக்கு அடையாளமாகவும், குறிகளாகவுமே திகழும். பரம்பொருளைக் குறிப்பிடும் அறிகுறியன்றி, நமது கோயிலில் வேறு விக்கிரகமென்பதில்லை. இதனால் மூலஸ்தானம் இலிங்கமாக நிற்கும். அவ்விலிங்கம் திருவொற்றியூர், திரு வாரூர் முதலிய இடங்களிலுள்ளதுபோல் பிரிதிவி லிங்கமாயுமிருக்க லாம். அல்லது திருவானைக் காவில்போல் அப்புலிங்கமாயும் விளங்கலாம். திருவண்ணாமலைபோல் தேயுலிங்கமாயும் நிற்கலாம். திருக்காளத்திபோல் வாயுலிங்கமாயும் விளங்கலாம். அல்லது பொன்னம்பலம்போல் ஆகாய லிங்கமாயும் நிற்கலாம். இவ்வாறு பஞ்சபூதங்களில் எப்பூதத்தை யாகிலும் இலிங்கம் அல்லது அறிகுறியாகத் திருக்கோயில்களில் பிரதிஷ்டைசெய்வது, தொன்று தொட்டுவந்த சைவ வழக்கமாம். இதை யறியாது சைவ சமயத் தினரை விக்கிரக ஆராதனை செய்வோர்என, மேல் நாட்டு முறையில் பழிப் பது அறியாமையின் மிகுதியேயாம்.

திருஞானசம்பந்தர் பொருளற்ற விக்கிரக ஆராதனையை வெளிப்படை யாக ஏளனம் செய்திருக்கின்றனர். அவர் சிதம்பரத்தில் பாடிய திருப்பதி கங்களில் ஒன்றில் “பட்டை துவர் ஆடை கட்டிய புத்த படிமத்தை (விக் கிரகத்தை) கொண்டாடும்” பௌத்தர்கள் கடவுள் இன்னதென்றே எண் ணாதவர்கள், என்றும் அருவாய்த் திகழ்ந்து அம்பலத்தில் நட்டமாடும் பர மனை வழிபடுவோரே சைவரென்றும், பௌத்தர்கள் விக்கிரக ஆராதனைக் கும் நமது சமயமுறையில் ஆகாய லிங்கமான சிவபெருமானை வழிபடும் மேன்மைக்குமுள்ள பேதம் இன்னதென்றும் பின்வரும் பாசுரத்தில் குறிப் பிடுவார்,

“ பட்டைத்து வராடைப்படி மங்கொண்டாடும்
மூட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே

சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
கட்டப் பெருமானை நாளும் தொழுவோமே"

என்றார்.

இக்கருத்தையே மணிவாசகப் பெருமானும், நமது வழிபாடு புறமதஸ்தர்கள் தடுமாற்றத்தில் கட்டுப்பட்டதன்றென்றும், உருவாகவும் அருவாகவும் சிவபெருமானை முறையே தியானிப்பதில் 'சித்தம் சிவமாகும்' தன்மை பெறுமென்றும் தமது திருத்தோணேக்கத்தில் பாடுவது காண்க.

"புத்தம் முதலாய புல்லறிவிற் பல்சமயக்
தத்தம் மதங்களிற் றட்டுளுப்புப் பட்டு நிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும்
அத்தன் கருணையினல் தோணேக்க மாடாமோ."

# ஐயவினுக்களுக்கு விடை

[கயப்பாக்கம் - சோமசுந்தர செட்டியார்]

ஆங்கிரஸ ஆண்டு சித்திரைத் திங்களில் வெளிவந்த "சித்தாந்த"ப் பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் திரு. சாமி - வேலாயுதம் பிள்ளையவர்கள் எழுதியிருக்கும் 2 ஐயவினுக்களுள் இரண்டாவதற்கு விடை பின் வருமாறு :

2. சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரத் திருப்பதிகத்தில் உள்ள பாடலில் கூறப்பட்ட நாயன்மார்கள் செய்த குற்றங்கள் இவை யென்று திரு. க. சதாசிவ செட்டியாரவர்கள், B. A. தாம் எழுதிய அகத்தியர் தேவாரத் திரட்டின் உரையில் விவகரித் தெழுதி யுள்ளதையே நான் கீழே எழுதியிருக்கிறேன்.

(a) திருஞானசம்பந்தர் - பரமுத்திக் குருகாலலாத பலரையும் நமச்சிவாயப் பதிக முரைத்து ஆட்படுத்திச் சிற்சோதியிற் புகவிட்டது.

(b) திருநாவுக்கரசர் - சமண் சமயம்புக்கு இறைவனைப் பண்டிகழ்ந்தமை.

(c) திருநாளைப் போவார் - தம்மரபிற் கடுத்ததல்லதாகிய சிதம்பரஞ் சென்று தரிசிக்க எண்ணியது.

சூதன் = மூர்க்க நாயனர்தான்.

(d) இவர் குற்றமாகக் கருதப்பெறும் சூதாட்டத்தை மேற் கொண்டதும், அவ்வாட்டத்தில் மறுத்தவரைச் சுரிகையாற் குத்தி மூர்க்கரானதுமாம்.

இனி, முதல் வினுவிற்கும் பின்னர் விடை எழுதுகிறேன்.

# சிவமும் உயிரும் ஒன்றல்ல

[ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள், அம்மன்கோயில், சுதுமலை, யாழ்ப்பாணம்]

சிலர் சிவமும் உயிரும் ஒன்றுதான் என்கின்றார்கள். அஃதாவது சிவமே உயிராய் விளங்குமென்பது அவர்கள் கருத்து. சிவம் சர்வஞ்ஞத்துவமுள்ளது. அநாதிபோதமுள்ளது. அநாதிபோதமென்பதின் பொருள் அநாதியே ஞானம் விளங்குதல் என்பதாம். சிவனது ஞானம் எதனுலும் தடுக்கப்படாது அநாதியே விளங்கி நிற்பது. ஆன்மா முத்தியில் எண் குணங்களைப் பெறினும் சிவனிடத்து விசேடமாய் விளங்கும் அநாதிபோதமாகிய குணம் ஆன்மாவுக்கில்லை. ஆன்மா அநாதி பந்தத்தால் ஞானம் விளங்காது தடைப்பட்டு நிற்றல், எல்லார்க்குந் தெரிந்த விஷயம். அவ்வாருக, அதனை அநாதியே ஞானம் விளங்கி நிற்கும் பொருள் என்றல் எப்படி? அநாதிபோத முண்மையும் அநாதிபோத மின்மையும் ஆகிய இந்த இயல்பே சிவம் ஆன்மா என்னும் இரண்டனையும் வெவ்வேறு இயல்புடையனவென்று விளக்கிக் காட்டும். சிவனிடத்து அநாதிபோதமாகிய குணம் விளங்கியபடியால், அதனைப் பாசமானது பற்றித்து அதன் ஞானத்தைத் தடுக்க வலியில்லாதிருக்கது. ஆன்மாவினிடத்து அந்தக் குணம் இயல்பில் அமைந்திராமையால் ஆன்ம ஞானத்தை அப்பாசங்கள் தடைசெய்யலாயின. இந்த இரண்டு பொருளின் இயல்பையும் அறிந்தவர்கள் சிவமும் உயிரும் ஒன்றென்று சொல்லார். சிவம் அநாதிபோதத்தினுலே ஒன்றினுங் கலப்பின்றி நிருமலப் பொருளாய் விளங்கும். ஆன்மா அநாதி பந்தத்தினுல் அறியாமையுடையதாய் அகங்காரங்கொண்டு நல்வினை தீவினைகளைச் செய்து பிறந்திறந்து துன்புறுவதால் அதனை அநாதிபோதமுடையதென்று கூற இயலாது. இந்த வேறுபாடுகளை நன்குணர்ந்து சிவமும் உயிரும் ஒன்றல்ல எனவும் வேறு வேறு இலக்கணமுடையனவெனவும் அறிந்து சிவனை மறவாது அன்புடன் வழிபடல் வேண்டும்.

## திருப்பெருந்துறையில் ஆனி மகம்

இதை யொட்டி நம் சமாஜக்கூட்டம் ஒன்று திரு. க. சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமையில் திருப்பெருந்துறை ஆத்மநாத ஸ்வாமிகோயிலில் கூடிற்று. திருவாளர்கள், சாமி வேலாயுதம் பிள்ளை, சமாபுரி முதலியார், நாராயணசாமி நாயுடு, ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆகிய சமாஜத் தொண்டர்கள் மாணிக்கவாசகர் சரித்திரம், பெருமை, திருவாசகச் சிறப்பு முதலியனபற்றிப் பேசினர்கள். சமாஜத்தின் புதிய 8, 9 திருமுறைப் பதிப்பும், திருவாசகப் பதிப்பும் வெளியிடப்பட்டன. அரிமளம் - அ. அரு. அண்ணமலை செட்டியார் அவர்களும், கோட்டையூர் வெ நா. லக்ஷ்மணசெட்டியாரவர்களும் வேண்டிய வசதிகளைச்செய்து தந்தார்கள்.

## திருநாவலூரில் சமாஜக் கூட்டம்

திருநாவலூரில் ஆடி சுவாதியை யொட்டி சமாஜக் கூட்டம் நான்கு நாட்கள் மிகச்சிறப்பாக நடந்தது. விவரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

## மதிப்புரைகள்

முருகன் அருள் வேட்டல்:—திரு. வி. கலியாணசுந்தர முதலியார் - 55 பக்கம் - விலை அணு 4. இந்நூலின்கண் இவ்வாசிரியர் முருகவேள்மீது புதிய முறையில் உள்ளக் கனிவும் பொருட் செறிவும் நிரம்பிய பல பாடல்களைப் பாடியுள்ளார். இறுதியில் குறிப்புரையும் சேர்க்கப்பட்டுள்ளது. சாதி, சமயம், சமூகம் முதலியவற்றினுள்ள சீர்திருத்தக் கருத்துக்களெல்லாம் அருள்வேட்டலினிடையிடையே விரவப்பெற்றுள்ளன. புதிய முறையில் அருள் வேட்டலுக்கு இஃதொரு மலையிலக்காக வுள்ளது.

கந்தரனுபூதி - கூடார்த்த தீபிகையுரை :—சிவத்யானாநந்த மஹர்ஷி - பக்கம் 232, விலை ரூ 1. இது நல்ல முறையில் எழுதப்பட்டுள்ளது. வடமொழி, மேற்கோள்களும் மேல்நாட்டு அறிவியற் கருத்துக்களும் இதில் கையாளப்பட்டுள்ளன. பாராயணம் செய்வோர் பொருளை நன்குகத் தெரிந்துகொள்ள இஃதொரு சிறந்த சாதனமாகும்.

திரு அருட்பா - திருமுகப்பகுதி:—ஆ. பாலகிருஷ்ண பிள்ளை - 190 பக்கம் - விலை அணு 6. முதல் நான்கு பகுதிகளைப்போலவே இதுவும் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக அச்சிடப்பட்டுள்ளது. அவைகளைப்போலவே இப்பகுதியும் விரைவில் செலவாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

தேவி உபநிஷத் தீபிகை:—நா. இராமநாத சாஸ்திரிகள் - 32 பக்கம் - விலை அணு 4. இதில் திரிபுரோபநிஷத் முதலிய ஐந்துள்ளன. எளிய நடையில் தெளிவான மொழிபெயர்ப்பு. தேவியின் உருவம், வழிபாடு முதலியவற்றின் விவரங்கள் தத்துவார்த்தம் இதிலுள்ளன. சிறந்த நூல். எல்லோரும் வாங்குக.

இந்நான்கு நூல்களும் முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டையில் கிடைக்கும்.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 5—No. 8

வெளி வந்து விட்டன ! வெளி வந்து விட்டன !!

# நம் சமாஜ வெளியீடுகள்

## திருவாசகம்

நல்ல கிளேஸ் காகிதத்தில் கிரவுன் அளவில்
160 பக்கங் கொண்ட அடக்கவிலைச் சுத்தப்பதிப்பு
தனிப்பிரதி அணு ௨½. பத்துப் பிரதிகள் ரூ. 1-4-0.
தபாற்கூலி வேறு.

## திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு

என்ற ௮, ௯ திருமுறைகள் - நல்ல கிளேஸ் காகிதத்தில் கிரவுன் அளவில் ந௨௮ பக்கங்கொண்ட அடக்கவிலைச் சுத்தப் பதிப்பு - மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம், ஆராய்ச்சிக் குறிப்புகள், திருவிசைப்பா ஆசிரியர் சரித்திரம், முதற்குறிப்பகராதி முதலியன அடங்கியது.

தனிப்பிரதி அணு 10. 10 பிரதிகளின் விலை ரூபா 5.
தபாற்கூலி வேறு.

சைவ சித்தாந்த மகா சமாஜம்.
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. 10—8—1932

இங்ஙனம் :
ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

D. GOPAUL CHETTY'S UNIQUE PHILOSOPHICAL WORKS

**CHIDAMBARA RAHASYA REVEALED**

Philosophical secrets of worship at Chidambaram are here scientifically explained for the first time. Price Re. 1.

**SAIVAISM, THE RELIGION OF THE ANCIENT BRITONS**

*The "Hindu Organ" says of this :—* "It will thus be seen that Mr. Chetty has done ample justice to the theory he advances." Price As. 8.

**பதி பசு பாச விளக்கம்**

(மொழிபெயர்ப்பு)

தமிழ் வித்துவான் திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் கூறுவது :—"அவ்வுண்மைகளைப் புதிய முறையில் வெளிப்படுத்தும் இந்நூலை வாங்கிப் படித்தலால் நல்ல பயன் எய்தலாகும். இந்நூலைப் படித்தலால் என்னறிவிற்குத் தெளிவுண்டாகிறது. விலை ரூபா 1.

*Apply to :—*

D. GOPAUL CHETTY,
Royapettah, Madras.

Printed by T. V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.